"பொது நிறுவனங்கள் தங்களது பொறுப்பிலிருந்து தவறியுள்ளன"

நாட்டின் பல பொது நிறுவனங்களுக்கு எதுவிதமான ஸ்தாபன திட்டங்களோ, செயல் திட்டங்களோ கிடையாது என பொது நிறுவனங்களுக்கான பாராளுமன்ற குழு குற்றம் சாட்டுகிறது. அவர்களது செயல்திறனற்ற தன்மை மற்றும் ஏனைய குறைபாடுகளிலிருந்து விடுட அத்திட்டங்களை தயாரிக்கும்படி அறிவுறுத்திய போதும் அத்திட்டங்களை பொது நிறுவனங்கள் தயாரித்ததில்லை என இப்பாராளுமன்ற குழு (COPE) அறிவிக்கின்றது. இதன் காரணமாக சமூகத்தின் நன்மைக்காக பரந்த அளவில் செய்ய வேண்டிய பொறுப்புக்களிலிருந்து இந்நிறுவனங்கள் தவறியுள்ளன.

இச்செயற்திட்டங்களை தயாரிக்கத் தவறிய பொது நிறுவனங்களில் இலங்கை தேயிலைச் சபை, இலங்கை மீன்பிடி துறைமுக கூட்டுத்தாபனம், அணுசக்தி அதிகாரச்சபை, நீர்வளங்கள் சபை, முகாமைத்துவ மற்றும் அரச முன்னேற்ற பட்டமேற்படிப்புக்கான நிறுவனம், கட்டிட கூட்டுத்தாபணம் ஆகியவைகளை இவ்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

நடைமுறை பாராளுமன்றத்தின் நான்காவது அமர்வில் COPE குழு 20 முறை சந்திப்புக்களை நடத்தி 20 பொது நிறுவனங்களை பரீட்சித்தது.

ஒவ்வொரு பொது நிறுவனங்களினதும் குறிக்கோள்கள் அதனை ஸ்தாபித்த பாராளுமன்ற சட்டத்தில் மிகத் தெளிவாக கூறப்பட்டிருக்கின்றபோதும் அவைகளை மறிக்கவோ, முக்கியத்துவம் கொடுக்கவோ, கருத்தில் கொள்ளவோ இந்நிறுவனங்கள் தவறியுள்ளன என இவ்வறிக்கை தெரிவிக்கிறது.

சட்டப்பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்ற வேலைகளில் இந்நிறுவனங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுரையை நாடாத்தாத காரணத்தால் இந்நிறுவனங்களுக்கு வரவேண்டிய பெரும் தொகையான பணத்தை மீளப் பெற முடியாது போயுள்ளது எனவும் COPE அறிக்கை கூறுகிறது. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் போன்ற மிகப்பெரிய அரச நிறுவனங்களும் முறையான சட்ட ஆலோசனையை பெறாமல் அதிக அளவிலான நட்டத்தை அடைய வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளன.

கணக்காய்வு குழுக்களை செயல்திறனோடு இயங்கவிட இந்நிறுவனங்கள் தவறியுள்ளன. இதன் காரணமாக நிதி முகாமைத்துவத்திலும், கணக்காய்விலும் மோசமான கட்டுப்பாட்டின்மை தோன்றியுள்ளது. கணக்காய்வுக்குழுக்களை பயனளிக்கும் வகையில் இயங்க விட்டால் தேவையான கட்டுப்பாடுகளை அமுல்படுத்தி ஒவ்வொரு நிறுவனங்களையும் திறன்பட செயல்படுத்த முடியும் என்றும் COPE தனது அறிக்கையில் குறிப்பிடுகிறது.

ஒவ்வொரு நிறுவனமும் தமது குறிக்கோள்களை ஸ்தாபன திட்டங்களிலும், ஆண்டறிக்கைகளிலும் மிகத்தெளிவாக கோடிட்டுக்காட்டுவதன் மூலம் அதன் நிர்வாகத்தை முறையாக கடமைகளை செய்ய ஊக்குவிக்க வேண்டும் என்று COPE சிபாரிசு செய்துள்ளது.

வைத்தியசாலைகளில் பெருமளவிலான சிறிய அளவிலான ஊழல்கள்

கொழும்பு மாவட்டத்தின் அரச வைத்தியசாலைகளில் இலஞ்சம், ஊழல், சொந்தக்காரருக்கான விஷேட சலுகை போன்ற விடயங்கள் பரந்த அளவில் நடைபெறுவதாக "டிரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா" நடத்திய ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

கொழும்பில் 200 குடியிருப்பாளர்களுக்கு மத்தியில் நடத்தப்பட்ட இவ்வாய்வில் வைத்தியசாலைகளில் நல்ல சேவையை பெற்றுக்கொள்ள சொந்த தொடர்புகள் / நட்புகள் அவசியம் என 98.5% ஆனோர் தெரிவித்தனர். உறவினர்களுக்கான விஷேட சலுகையே உச்சநிலை ஊழலாக இங்கு காணப்பட்டாலும் இலஞ்சம் பெறுவதும் பெருமளவில் நிலவுகின்றன.

எவ்வாறாயினும் ஆய்வில் கலந்து கொண்டோர் பலர் வைத்தியசாலையில் உள்ள சலுகைகள் அனைத்தும் தமது நலனுக்கு உபயோகப்படுத்தப்படும் சேவை தமக்கு கிடைப்பதையிட்டு திருப்தி தெரிவித்தனர்.

சேவைகளை பெற நீண்ட வரிசையில் காத்திருப்பது, வைத்தியசாலை சேவகர்களின் கருணையற்ற செயற்பாடு, மற்றும் தமக்கு நிர்ணயிக்கப்படும் மருந்துகளுக்கான கட்டுப்பாடு போன்ற குறைபாடுகள் வைத்திய சேவையில் திருப்தியடையாதவர்களால் சுட்டிக்காட்டப்பட்டன. சேவகர்களோடு தனியான தொடர்புகள் வைத்துக் கொள்வதும் அவர்களுக்கு பணம் அல்லது பரிசுப் பொருட்கள் கொடுப்பதும் நோயாளிகளுக்கு முன்னண்ண சேவை பெற்றுக்கொள்ள வழிவகுக்கின்றது. இலஞ்சம் பெறுவது கீழ் மட்டத்தில் உள்ள சேவகர்கள் மத்தியில் நிலவுவதை இவ்வாய்வு சுட்டிக்காட்டிய போதும் வைத்தியசாலை நிர்வாகத்தில் மேல் மட்டத்தில் உள்ளவர்கள் மத்தியிலும் இலஞ்சம் / ஊழல் போன்றவை காணப்படலாம் என இவ்வறிக்கை குறிப்பிடுகிறது. இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 185 இலஞ்ச கொடுப்பனவுகளில் 179 கொடுப்பனவுகள் சிறு சேவகர் சம்பந்தப்பட்டதாகவும் ரூபா 100 க்கு குறைந்த தொகையுடையதாகவும் உள்ளது. ரூபா 500 க்கு மேற்பட்ட கொடுப்பனவுகள் 9 மட்டுமே அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கை அதிகமான சிறு தொகை சம்பந்தப்பட்ட சிறிய அளவிலான ஊழல்களை சுட்டிக்காட்டியபோதும் வைத்தியர்கள், தாதியர்கள் பெறும் தொகைகள் சம்பந்தப்பட்ட ஊழல்களை தெரியப்படுத்த விருப்பமற்ற காரணங்கள் இருக்கலாம் எனவும் இவ்வறிக்கை தெரிவிக்கிறது.

நோயாளிகள் தமது உரிமைகள் பற்றி அறிவற்ற நிலையில் இருப்பதால் அது பற்றிய பலமான சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் எனவும் இவ்வறிக்கை வலியுறுத்துகிறது. சுகாதார சேவைகளை அடைந்து கொள்வதற்காக தமது உரிமைகளை கேட்டு பெற்றுக் கொள்வதற்கு பதிலாக தடைகளை தாண்டிச் செல்வதற்கு இலஞ்சம் கொடுப்பதில் ஈடுபடுகின்றார்கள்.

இவ்வாய்வில் பங்குகொண்ட அனைவருமே இலஞ்சம் கொடுப்பது சமூகத்தில் ஒருவிதமான பாதகமான தாக்கத்தை உண்டு பண்ணுகின்றது என ஒத்துக் கொண்டனர். இதன் காரணமாக இலஞ்சம், ஊழல் போன்ற துர்செயல்களை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என இவ்வாய்வில் பங்குகொண்ட குடியிருப்பாளர்கள் வலியுறுத்தினர்.

ஒப்படைப் போட்டிக்கு நல்ல வரவேற்பு

பல்கலைக்கழக மற்றும் உயர் படிப்பு நிறுவனங்களின் மாணவர்களுக்காக TISL நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஊழலுக்கெதிரான ஒப்படைப் போட்டிக்கு உற்சாகமூட்டும் வரவேற்பு கிடைத்துள்ளது. இப்போட்டியில் பங்குபெற விண்ணப்பித்த பலநூறு மாணவர்களுள்அடிப்படை விதிகளைப் பூர்த்தி செய்ததனடிப்படையில் 452 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதில் பெரும்பாலான மாணவர்கள் தமிழ் மொழி மூலம் பங்குபெறுவது முக்கிய அம்சமாகும். சிங்கள மொழி மூலம் 157 பேரும், ஆங்கில மொழியில் 41 பேரும் பங்குகொள்ளும் அதேவேளை தமிழ் மொழி மூலம் 254 பேர் பங்குகொள்வர்.

இதில் பெரும்பான்மையானோர் பேராதெனிய பல்கலைக்கழக மாணவர்களாவர். ஏனையோர் மற்றைய பல்கலைக்கழகங்களையும், சட்டக்கல்லூரியினதும், வேறு வகையான உயர் கல்வி நிறுவனங்களையும் சேர்ந்தவர்களாவர்.

மாணவர்கள் எப்படி தங்களது படிவங்களை அமைக்க வேண்டும் என அறிவூட்டுவதற்காக 13 கருத்தரங்குகளை அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கண்டி, மாத்தளை போன்ற இடங்களில் TISL நடத்தியது குறிப்பிடத்தக்கது.

18 அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு நல்லாட்சி பற்றிய அறிவுரைகள

சிவில் சமூக நிறுவனங்களுக்கான "பொன்னான ஒழுங்குவிதிகளை"" TISL உருவாக்கியதை தொடர்ந்து நல்லாட்சிக்கான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டுமென 18 அரச சார்பற்ற நிறுவனங்கள் TISL ஐ கேட்டுள்ளது. இப்பதினெட்டு நிறுவனங்களும் Fredskopset Sri Lanka (FKSL)ன் கூட்டு நிறுவனங்களாகும்.

இதன் முதற்கட்டமாக இவ்வரச சார்பற்ற நிறுவனங்கள் எவ்வாறு இயங்கவேண்டும் என கலந்துரையாடி நல்லாட்சிக்கான கட்டமைப்புகளை வடிவமைக்கவென ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. TISL நிறுவனத்தால் இக்கருத்தரங்கு ஆகஸ்ட் 24ம் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் நடாத்தப்பட்டது. இம்முயற்சி வெற்றியளிப்பதற்காக இக்கட்டமைப்பின் உறிமையை அவர்களும் உணருவது மிக முக்கியமானதாகும்.

அவர்களது செயல் முறைகளை நன்றாக அறிந்து இக்கட்டமைப்பு தங்கள் தேவைக்கு உகந்ததுதான் என கிரகித்துக்கொள்ளவேண்டும் என்பதற்காக இக்கூட்டு நிறுவனங்களுக்கான கள விஜயங்களும் மேற்கொள்ளப்பட்டன. கொழும்பு, பதுளை, கேகாலை, புத்தளம் ஆகிய பகுதிகளில் இருக்கும் காரியாலயங்களுக்கு இக்கள விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மாவட்ட அடிப்படையில ஊழலை ஒழித்தல்

குருணாகல மாவட்டத்தின் மாவத்தகம மாவட்ட செயலாளர் பிரிவில் ஊழலை ஒழித்து நல்லாட்சியை ஊக்குவிப்பதற்காக TISL ஏற்பாட்டில் ஓர் செயல்முறை திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச ஊழியர்களை கொண்ட 40 பேர் இச்செயல்முறை திட்டத்தினை தயாரிப்பதில் பெரும் பங்கு வகித்தனர். இவர்கள் TISL நிறுவனத்தால் மாவத்தகம பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்ட 10 கருத்தரங்கு / செயலமர்வுகளில் பங்கு கொண்டிருந்தனர்.

அரச அதிகாரிகள் மத்தியில் நேர்மைத்தன்மை, ஒழுக்க கோவைக்கான அவசியம், மக்கள் கணக்காய்வு மற்றும் பொது மக்களின் முறைப்பாடை ஆராயும் இயந்திர வடிவமைப்பு போன்ற முக்கிய அம்சங்களை இச்செயல் திட்டம் உள்ளடக்கியுள்ளது.

நேர்மைத்திறன்

டிரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா - செய்தியறிக்கை வெளியீடு 6 நவம்பர் 2009

ஊழல் உணர்வுச் சுட்டெண்ணில் இலங்கை 97ம் இடத்துக்கு வீழ்ச்சி

வருடாந்த ஊழல் உணர்வுச் சுட்டெண்ணின் அடிப்படையில் 180 நாடுகளுக்கு மத்தியில் இலங்கையின் நிலை 2009ம் ஆண்டில் 97ம் இடத்துக்கு வீழ்ச்சி அடைந்துள்ளது. சென்ற ஆண்டு இலங்கை 92ம் இடம் வகித்தது இங்கு குறிப்பிடத்தக்கது. நாடுகளின் பொதுத்துறையில் இருக்கும் ஊழல்களில் கவனம் செலுத்தும் இச்சுட்டெண் ஊழல்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும் "டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் (TI) மற்றும் உலக சிவில் சமூகம் என்ற நிறுவனங்களால் நடத்தப்படுகின்றது.

இவ்வட்டணையில் இலங்கையின் புள்ளி (கடந்த ஆண்டு 3.2ல் இருந்தது) 3.1 ஆகக் குறைந்துள்ளது. இது நாட்டின் பொது துறையில் அதிகமான ஊழல் மோசடிகள் நிகழ்வதை எடுத்துக் காட்டுகிறது. 2002ம் ஆண்டு 3.7 என்ற புள்ளியில் இருந்த இலங்கையின் நிலை தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்த வண்ணமே உள்ளது.

இது விடயமாக கருத்துத் தெரிவித்த TI நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. வெலியமுன இவ்வட்டவணை புலப்பாட்டிப்படையானதாக இருந்தபோதும் இதுதான் உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டதும், அதிகளவில் மேற்கோள்காட்டப்படுவதுமான சர்வதேச ஊழல் அட்டவணையாகும் என தெரிவித்தார். இதன் மூலம் இலங்கை மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்னவெனில்அது அவசரமாக ஊழல் ஒழிப்பு சம்பந்தமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதாகும். இவ்வருடத்தின் இந்த ஊழல் உணர்வுச் சுட்டெண் வெளிக்காட்டுவது என்னவெனில் ஊழலுக்கு எதிரான நடவடிக்கை தேசிய ரீதியாக முன்னுரிமைப்படுத்தப்படுத்தப்பட வேண்டும் என்பதே ஆகும் என்றும் அவர் தெரிவித்தார்.

சர்வாதிகார ஆட்சி முறைமைகளையும் தேசிய அளவிலான சர்ச்சைகளையும் கொண்ட நாடுகளே இவ்வட்டவணையில் மிகவும் கீழான புள்ளிகளை பெற்றுள்ளன என திரு. வெலியமுன கூறினார். ஊழல் உணர்வுச் சுட்டெண் (CPI) எனும் இவ்வட்டவணை ஒவ்வொரு நாட்டிலும் நிகழும் ஊழல்களின் அளவை மதிப்பிட்டு 0 முதல் 10 வரையிலான அளவீட்டை அளிக்கிறது. இதில் பூஜ்ஜியம் என்பது அதிக அளவிலான ஊழல் நிலைக்கும் 10 என்பது மிகக் குறைவான ஊழல் நிலையுள்ள நாடுகளுக்கும் வழங்கப்படுகிறது. அரசியல்வாதிகள் மற்றும் அரச சேவை ஊழியர்கள் மட்டத்தில் நிலவும் ஊழல்களை புலப்படுத்தியே சம்பந்தப்பட்ட நாடுகளுக்கான புள்ளிகள் வழங்கப்படுகின்றன.

இலங்கையை அண்மித்த நாடுகளின் நிலையை பார்க்கின்றபோது இந்தியாவின் புள்ளி 3.4 ஆகவும் மாலைதீவு (2.5) பங்களாதேஷ் (2.4) பாகிஸ்தான் (2.4) மற்றும் நேபாளம் (2.3) ஆகவும் 3 புள்ளிகளுக்கு குறைந்த இடங்களிலேயே உள்ளன. இவ்வருடத்திற்கான பூடானின் புள்ளி 5.0 ஆகும்.

டிரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் (TI) நிறுவனத்தின் தலைவர் திரு. ஹுகட் லபெல் இவ்வட்டவணை வெளியீட்டின் போது தெரிவித்த கருத்தில் ஊழல்களை நிறுத்த வேண்டுமாயின் பாராளுமன்றத்தின் அதிஉயர் கண்காணிப்பு, நல்ல முறையில் இயங்கும் சட்டத்துறை, சுகந்திரமான மற்றும் சரியான வளங்களுடனான கணக்காய்வு, ஊழலுக்கெதிரான பலம்வாய்ந்த நிறுவனங்கள், கடுமையான சட்ட அமுலாக்கம், பொது வரவு செலவு திட்டத்தில் வெளிப்படைத்தன்மை போன்ற காரணிகள் அத்தியாவசியமாகும். மேலும் சுதந்திர ஊடகத்திற்கான நிலவரம் மற்றும் சிறந்த சிவில் சமூகம் ஆகியனவும் அத்தியாவசியமாகும் என தெரிவித்தார்.

தனியார் துறையில் நிகழும் ஊழல் 03

வைத்தியசாலைகளில் பெருமளவிலான சிறிய அளவிலான ஊழல்கள் 05

வெலியமுன மீதான கைக்குண்டு தாக்குதல் ஒரு வருடமாகியும் நடவடிக்கை இல்லை

'ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா' (TISL) நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. ஜே.சீ. வெலியமுனவின் வீட்டின் மேல் கைக்குண்டு தாக்குதல் நடத்தப்பட்டு ஒரு வருடம் கழிந்து விட்டது. இத்தாக்குதல் 2008 செப்டம்பர் 27ம் திகதி இரவு 11.00 மணி அளவில் நடத்தப்பட்டது. இத்தாக்குதலுக்கு யார் பொறுப்பு என கண்டறியும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிகிறது.

இவ்வன்முறைச் செயலை ஆராயும் விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காட்டும் அக்கறையின்மை சிவில் சமூக ஸ்தாபனங்களை பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

தாக்குதல் யாரால் மேற்கொள்ளப்பட்டது என அறிய முடியாவிடினும் திரு. வெலியமுன ஊழலுக்கெதிராகவும் மனித உரிமை மீறலுக்கெதிராகவும் இயங்கும் சட்டத்தரணி என்ற காரணத்தாலேயே தாக்குதலுக்குள்ளானார் என்பது உண்மை.

இத்தாக்குதலுக்கு எதிரான விசாரணையில் எந்த முடிவும் இல்லாத காரணத்தால் இது பற்றிய வெளிப்படையான சீரிய விசாரணைகள் சம்பந்தமான முன்னேற்றங்களை TISL அவதானித்த வண்ணமுள்ளது.

சிவில் சமூகத்தின் மேலும், உடகவியலாளர்கள் மீதும் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான தாக்குதல்கள் பற்றி TISL தனது ஆழ்ந்த உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ள அதேவேளை, கருத்துச் சுதந்திரத்திற்கும் மக்களின் சுயாதீன இயக்கத்துக்கும் எதிரான இந்நடவடிக்கைகளை அது வன்மையாக கண்டிக்கிறது.

நலன்மிக்க மக்கள் சேவைக்கான பிரஜைகள் சாசனம்

35 அமைச்சுக்கள் பிரஜைகள் சாசனத்தை பூர்த்தி செய்துள்ளதாகவும் அடுத்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து அவை அமுல்படுத்தப்படும் என்றும் பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

மக்களுக்கு சிறந்த சேவைகள் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு அமைச்சுக்கள் தத்தமது பிரஜைகள் சாசனத்தை அவசரமாக தயார் செய்ய வேண்டுமென அமைச்சரவை வலியுறுத்தியது.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் திரு. டி தி்லநாயக்கவின் கூற்றுக்கமைய வெவ்வேறு அரச நிறுவனங்கள் மக்களுக்காக என்னென்ன சேவைகளை வழங்குகிறது என பொது மக்கள் பிரஜைகள் சாசனம் மூலம் அறியக்கூடியதாய் இருக்கும். குறிப்பிட்ட ஒரு சேவையை முற்றாக அடைந்து கொள்ளக்கூடிய சரியான கால எல்லையை இப்பிரஜைகள் சாசனம் மக்களுக்கு அறிவிக்கும். உதாரணமாக பிரதேச காரியாலயத்திற்கு வரும் ஒருவர் பிறப்புச் சான்றிதழ் ஒன்றை ஒரு மணித்தியாலத்தில் பெற்றுக்கொள்வார் என அங்குள்ள அறிவித்தல் மூலம் தெரிந்து கொள்வார்.

"மக்கள் வெறுமனே சேவையை அல்ல தரமான நல்ல சேவையை திணைக்களங்கள் மூலம் அடைந்து கொள்ள உரிமை உடையவர் என்பதை நாம் மக்களுக்கு அறியத் தர வேண்டும். "தூய கரங்கள்" என்ற பிரச்சாரத்தில் நாம் நிறைய முன்னேற்றங்கள் அடைந்துள்ளோம் என்பதற்கான ஒரு உதாரணமே பிரஜைகள் சாசனம் என திரு. திசாநாயக்க தெரிவித்தார்.

"தூய கரங்கள்" என்ற பிரச்சாரம் அரசாங்க சேவையின் போது ஊழியர்களின் உதவியோடு அரசாங்க துறையில் நிலவும் ஊழல்களுக்கு எதிராக திரு. திசாநாயக் அவர்களால் சில வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. 35 அரச ஊழியர்களோடு சில வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இப்பிரச்சார பணியில் தற்போது 11,500 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

ஊழல் உணர்வுச் சுட்டெண்ணில்....



உலக அரங்கில் CPI அட்டவணையின் முக்கியத்துவம் பற்றி கூறும் TI நிறுவனம் கூறுவதானது, உலக பொருளாதாரம் மீள எழுச்சி எதிர்பார்ப்போடு இயங்கும் அதேவேளை, பாதுகாப்பின்மையோடும் உள்நாட்டு சச்சரைகளோடும் சில தேசங்கள் போராடுகிறது. இப்படியான காலகட்டத்தில் ஊழல் அபாயத்திலிருந்து விடுபடுவதென்பது நாடுகளுக்கு கடுமம்தான். இருந்தபோதும் அதிக அளவிலான பொருளாதார மீட்பு நடவடிக்கைகளும், பரவலான பொது நிதி பாவனைகளும் சமாதான நிலைநாட்டலுக்கான திட்ட அமுலாக்கங்களும் உலக அளவில் மேற்கொள்ளப்படும் இக்காலகட்டத்தில் நல்லாட்சியையும், பொறுப்புணர்ச்சித்தன்மையையும் தடுக்கும் ஊழல்களை அடையாளம் கண்டு அவைகளின் துர்பிடித்த செயற்பாடுகளை உடைத்தெறிவது மிக முக்கியமாகும்.

180 நாடுகளில் பெரும்பான்மையான நாடுகள் 5.0க்கும் கீழான புள்ளிகளை பெற்றிருப்பது அவ்வாண்டின் CPI அட்டவணையின் விஷேட அம்சமாக கருதப்படுகிறது.

2009ம் ஆண்டின் CPI அட்டவணையில் அதிக புள்ளிகளை பெற்ற நாடுகளாக நியூஸிலண்ட் (9.4), சுவீடன், சிங்கப்பூர் (9.2) மற்றும் சுவிட்சலாந்து (9.0) ஆகியன கருதப்படுகின்றன. இந்நாடுகளினது அரசியல் ஸ்திரத்தன்மை, நீண்டகாலமாக நிலவும் சர்ச்சை கட்டுப்பாட்டுத்தன்மை மற்றும் மிகவும் சிறந்த முறையில் இயங்கும் அரசியல் சட்டம் ஆகியவைகளையே இப்புள்ளிகள் பிரஸ்தாபிக்கின்றன. அட்டவணையில் கீழ் மட்டத்தில் உள்ள நாடுகளாக சோமாலியா (1.1) ஆப்கானிஸ்தான் (1.3) மியன்மார் (1.4) மற்றும் சூடான், இராக் (1.5) ஆகியன உள்ளன. உச்சக்கட்டத்தில் ஊழல்கள் நிகழும் இந்நாடுகள் நீண்டகால உள்நாட்டு சர்ச்சைகள் காரணமாக நல்லாட்சி தகர்க்கப்பட்ட நாடுகளாக உள்ளதையே இப்புள்ளி விபரங்கள் வெளிப்படுத்துகின்றன.

TI அறிக்கை வெளிப்படுத்துகிறது
தனியார் துறையில் நிகழும் ஊழல்

"டிரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் (TI) நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள 2009ம் ஆண்டிற்கான உலக ஊழல் அறிக்கையின் பிரகாரம் வியாபார நடவடிக்கைகளில் நிகழும் இலஞ்ச கொடுப்பனவின் அளவும் பரப்பும் மிக அதிகரித்துள்ளது".

TI நிறுவனத்தால் 26 நாடுகளிலுள்ள 2700 வணிகத்துறை நிறைவேற்று அதிகாரிகள் மத்தியில் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில் பொது நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்களில் தாம் இலஞ்சம் கொடுக்க நேரிட்டதாக 40% மானோர் பதிலளித்தனர். பொது வேலைத்திட்டங்களது பெறுமதி இலஞ்சம் காரணமாக 10% அதிகரிப்பதாக ஆய்வில் பங்கு கொண்டோரில் பாதிக்கும் மேற்பட்டோர் தெரிவித்தனர். வியாபார போட்டியாளர்கள் கொடுக்கும் இலஞ்சம் காரணமாக தமது வியாபாரத்தை இழந்ததாக மேலும் 40% மானோர் தெரிவித்தனர். இதில் மூன்றில் ஒரு பகுதியினர் ஊழல் மிகவும் அதிகரிப்பதாக கருத்து வெளியிட்டனர்.

இலஞ்சக் கொடுப்பனவின் விளைவுகள் மோசமானதாகும். முன்னேற்றமடைந்து வரும் நாடுகளில் மாத்திரம் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் வருடத்திற்கு 200 முதல் 400 கோடி அமெரிக்க டொலர்களை இலஞ்சமாக பெறுகின்றனர். இத்தொகை முன்னேற்ற நடவடிக்கைகளுக்காக நாடுகளுக்கு கொடுக்கப்படும் உதவித்தொகைகளின் 20 முதல் 40 சதவீதமாகும்.

அக்கறையற்ற வியாபார நிறுவனங்கள் இலஞ்ச ஊழலில் ஈடுபடும்போது அது மிக மோசமான விளைவுகளை தோற்றுவிக்கின்றன. சட்டங்களை மதிக்காது செயற்படும் இக்காரணங்களால் எயெயினில் தண்ணீர் பற்றாக்குறையும், சீனாவில் தொழிலாளர் சுரண்டலும் இந்தோனேசியாவில் திருட்டுதனமாக மரம் வெட்டலும், றைஜீரியாவில் பாதுகாப்பற்ற மருந்து விநியோகம், துருக்கியில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் கட்டிட சரிவுகள் போன்றவை நிகழ்கின்றன. வர்த்தக நிறுவனங்கள் மகிழ்ச்சி கொடுப்பனவாக கொடுக்கும் சிறு தொகைகள் கூட தீய விளைவுகளை ஏற்படுத்துகின்றன. மாகபட் அரசியல் அதிகாரிகளையும் அரசியல் கட்சிகளையும் அரசாங்கங்களையும் அவைகள் வளர்த்தெடுக்கின்றன என்று TI நிறுவனத்தின் அறிக்கை கூறுகிறது.

ஊழலுக்கெதிரான பரந்த அளவிலான செயல்பாடுகள் மற்றும் வணிகத்துறையின் சமூக பொறுப்புணர்வு (CSR) நடவடிக்கைகள் போன்ற செயற்பாடுகள் காரணமாக உலகளவிலான வியாபாரத்தில் தெளிவான பொறுப்புணர்வும், ஊழலுக்கெதிரான முக்கிய பங்கு வகிப்பும் தோன்றியிருக்கிறது எனும் செய்தி இவ்வறிக்கையின் முக்கிய அம்சமாகும்.

எண்பதுக்கும் அதிகமான நிபுணர்களும் கல்விமான்களும் இன்றைக்கு வரையிலுமான ஊழல்கள் பற்றிய ஓர் பூரண ஆய்வையும் அதை நீக்குவதற்கான பரிகாரங்களையும் உலக வியாபார துறை நலனுக்காக இவ்வறிக்கையில் சமர்ப்பித்துள்ளனர்

வியாபாரத்துறையில் ஊழல் நிகழாதிருக்க தந்திர உபாயங்கள், மாற்று நடவடிக்கைகள் போன்றவற்றை அமுல்படுத்தும் மன உறுதிப்பாடே மிக முக்கியமாகும்.

- ஊழல் அபாயம் இலஞ்சத்திலிருந்து ஆரம்பித்து ஏனைய ஊழல் நடவடிக்கைக்கு இட்டுச் செல்லும் என்பதை வியாபாரத்துறை அறிந்திருப்பதோடு வணிக அடிப்படையிலான நேர்மைக்காக பன்முகப்படுத்தப்பட்ட செயல் நடவடிக்கையில் ஈடுபட் அவசியமாகும்.

- அரசாங்கங்கள் புதிய உக்திகளின் நலன்பாடுகளை கருத்தில் கொண்டு அவைகளை அமுல்படுத்தி கட்டுப்பாட்டு இயலுமைகளுக்கு கூருதலான அழுத்தம் கொடுப்பதோடு சர்வதேச அளவிலான ஒத்துழைப்பையும் நாட வேண்டும்.

- வியாபார ஊழல்கள் ஏனைய சமூக முன்னேற்ற நடவடிக்கைகளிலும் கற்றல் சூழலிலும் எவ்வாறான சவால்களை தோற்றுவிக்கின்றன என்பதை சிவில் சமூகம் சரியாக அறிந்திருப்பதோடு வணிக அடிப்படையிலான நேர்மைக்காக பரந்த, செயல்திறன் மிக்க ஆதரவையும், கூட்றுவையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

- வியாபார நேர்மை என்பது பலதரப்பட்ட சம்பந்தப்பட்ட கூட்டு முயற்சி என்பதையும் அதற்கு எல்லைகளுக்கும், வித்தியாசமான துறைகளுக்கும் அப்பாற்பட்ட ஆதரவும் கூட்டு நடவடிக்கையும் அவசியம் என்பதை வியாபார உரிமையாளர்கள் முதல், நிறைவேற்று அதிகாரிகள், தொழிலாளர்கள், கணக்காய்வாளர்கள், கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் ஊழலுக்கெதிரான சக்திகள் அனைவரும் மனதார ஒப்புக் கொள்ள வேண்டும்.

கம்பனிகள் சட்டத்தின் 487 வது பிரிவில் மறைவான நோக்கம்

2007ன் 7வது இலக்க கம்பனிச் சட்டத்தின் சில அம்சங்களை அரசு மீள் வகுக்க வேண்டுமென "டிரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா" (TISL) அரசை கேட்டுக்கொள்கிறது.

இப்புதிய கம்பனிச் சட்டத்தின் 487வது பிரிவின் உள்ளடக்கத்தில் மறைமுகமான நிகழ்ச்சி நிரல் ஒன்று இருப்பதாக தகுந்த காரணங்களோடு கட்டுக்காட்ட முடியுமென TISL நம்பிக்கை வெளியிட்டுள்ளது. செயலிழந